(6 pages) **Reg. No. : ....**

Code No. : 22114 **Sub. Code : R 4 TA 41/ B 4 TA 41**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2012.

Fourth Semester

Tamil — Allied

Paper IV — தலித்தியம்

(For those who joined in July 2008 and afterwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

சரியான விடையைத் தேர்வு செய்க.

1. தரங்கம் பாடி சமயப் பரப்புநர்கள் 'யாத்ரீகம் சங்கத்தை' அமைந்த ஆண்டு.

   (அ) 1835 (ஆ) 1828

   (இ) 1840 (ஈ) 1825

2. பஞ்சமர்களுக்கு ஆற்றும் சேவைதான் நீதிக்கட்சியின் நம்பகத் தன்மையை வளர்க்கும் என்று கூறியவர்.

   (அ) பனகல் அரசர்

   (ஆ) இரட்டை மலை சீனிவாசன்

   (இ) என்.சிவராஜ்

   (ஈ) டி.எம். நாயர்

3. "எல்லோரையும் ஒரேயடியாக பிராணமர்களாக்கி விட முடியும்" என்று சொன்னவர் யார்?

   (அ) பாரதி (ஆ) விவேகானந்தர்

   (இ) மாதவையா (ஈ) நாராயணகுரு

4. மாற்கு எழுதிய நாவல்.

   (அ) தோழர் (ஆ) பிறகு

   (இ) சங்கதி (ஈ) வருவான் ஒருநாள்

5. 'வர்க்கம்' பற்றிய கருத்துருவினால் புறக்கணிக்கப்பட்டது எது?

   (அ) பெண்ணடிமைத்தனம்

   (ஆ) சாதியமைப்பின் மீதான கவனம்

   (இ) மொழி வேற்றுமையின் பரிமாணம்

   (ஈ) பார்ப்பனர்களின் அரசியல் உயர்வு

6. பூமணியின் படைப்பில் இனங்காணப்படுவது.

(அ) முதலாளித்துவத்தின் செல்வாக்கு

(ஆ) நிலவுடமையின் செல்வாக்கு

(இ) பொதுவுடமையின் செல்வாக்கு

(ஈ) திராவிட இயக்கத்தின் செல்வாக்கு

7. "கடவுளின் பிள்ளை" என்ற பொருள் தரும் சொல்.

(அ) தலித் (ஆ) அரிஜன்

(இ) பஞ்சமர் (ஈ) ஆதிதிராவிடன்

8. 'தலித் அரசியல்' என்னும் நூலின் ஆசிரியர்.

(அ) தமிழவன் (ஆ) மார்க்ஸ்

(இ) தயாபவர் (ஈ) அ.ராமசாமி

9. தலித்தின் எதிர்ச் கலாச்சாரம் யாருடைய எழுத்தில் ஊக்கமாக ஒலிக்கிறது?

(அ) பாமா (ஆ) இமயம்

(இ) சிவகாமி (ஈ) ராஜ் கௌதமன்

10. கன்னட தலித் எழுத்துக்களைத் தமிழில் மொழி பெயர்த்தவர்.

(அ) ராஜ் கௌதமன்

(ஆ) ஞானி

(இ) பாவண்ணன்

(ஈ) டாக்டர்.சண்முக சுந்தரம்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 250 சொற்களில் விடை தருக.

11. (அ) "டேனிஷ் மிஷன்" தமிழகச் சாதிய அமைப்பில் அதிர்வுகளை எவ்வாறு ஏற்படுத்தியது?

(அல்லது)

(ஆ) பிராமணரல்லாதோர் இயக்கம் பற்றிய பாரதியின் கருத்துக்களை விவரி?

12. (அ) தாழ்த்தப்பட்டவரை, முன்னேற்ற பாரதி கூறும் வழிமுறைகள் யாவை?

(அல்லது)

(ஆ) 1980–க்கு பின்னர் தோன்றிய தலித் பிரச்சனைகளை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்கள் பற்றி எழுதுக.

13. (அ) பெரியாரின் தீண்டாமை எதிர்ப்பு பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) பெரியாரின் சிந்தனை பார்ப்பனிய எதிர்ப்பிலேயே முனைப்புப் கொள்கிறது என்று சஜன் எவ்வாறு விளக்குகிறார்.

14. (அ) 'தலித்' என்னும் சொல் சுரண்டப்படும் மக்களைக் குறிப்பிடும் பெயர் என்பதனை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஹரிஜன இயக்கத்தின் வீழ்ச்சியை எழுதுக.

15. (அ) "தலித் நாவல் தமிழ் வட்டார நாவல் மரபினின்று வேறானது" என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழி பெயர்ப்பு தலித் இலக்கியங்கள் குறித்துஎழுதுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 600 சொற்களில் விடைதருக.

16. (அ) ஆங்கில ஆதிக்கம் தமிழ்ச் சமூகத்தில் ஏற்படுத்திய பாதிப்புகளை விவரி.

(அல்லது)

(ஆ) திராவிட இயக்கம் குறித்து எழுதுக.

17. (அ) தாழ்த்தப்பட்டோர் பற்றிய பாரதியின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாரதியிடம் சாதிய உணர்வு இருந்தாலும், அறிவு அடிப்படையில் அவர் சாதியமைப்பை எதிர்த்தார் என்பதை நிறுவுக.

18. (அ) தலித் மக்களின் விடுதலையை, பொருளாதார விடுதலை உறுதிப்படுத்த முடியாது என்பதற்கான காரணங்களை விவரி.

(அல்லது)

(ஆ) பெரியாரின் சாதி ஒழிப்புக் கொள்கைகளை விளக்குக.

19. (அ) 'தலித்' இலக்கியம் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) தலித் இலக்கியத்தின் தனித்தன்மையை விளக்குக.

20. (அ) தலித் சிறுகதைகள் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான அடையாளத்தைப் பதித்துள்ளன என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) தலித் இலக்கியங்களின் வகைமைகளைச் சான்றுகள் காட்டி விளக்குக.

———————